# QB365 Question Bank Software Study Material

## ஈர்ப்பியல் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 11ம் வகுப்பு

## இயற்பியல்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

50 x 1 = 50

1) கோளின் நிலை வெக்டரும் கோண உந்தமும் ஒன்றுக்கொன்று செங்குத்தாக அமைவது _____.

**(அ) அண்மை நிலை மற்றும் சேய்மை நிலையிலும்** (ஆ) அனைத்து புள்ளிகளிலும்

(இ) அண்மை நிலலயில் மட்டும் (ஈ) எப்புள்ளியிலும் அல்ல

2) திடீரென புவி மற்றும் சூரியனின் நிறைகள் இருமடங்காக மாறினால், அவைகளுக்கிடையேயான ஈர்ப்பியல் விசை_____.

(அ) மாறாது (ஆ) 2 மடங்கு அதிகரிக்கும் **(இ) 4 மடங்கு அதிகரிக்கும்** (ஈ) 4 மடங்கு குறையும்

3) சூரியனை ஒரு கோள் நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகிறது. கோளின் அண்மை தொலைவு ($r_1$) மற்றும் சேய்மைத்தொலைவு ($r_2$) களில் திசைவேகங்கள் முறையே $v_1$ மற்றும் $v_2$ எனில் $\frac{v_1}{v_2}$ = _____.

**(அ) $\frac{r_2}{r_1}$** (ஆ) $\left(\frac{r_2}{r_1}\right)^2$ (இ) $\frac{r_1}{r_2}$ (ஈ) $\left(\frac{r_1}{r_2}\right)^2$

4) புவியினை வட்டப்பாதையில் சுற்றிவரும் துணைக்கோளின் சுற்றுக்காலம் எதனை சார்ந்தது அல்ல?

(அ) சுற்றுப்பாதையின் ஆரம் **(ஆ) துணைக்கோளின் நிறை**

(இ) சுற்றுப்பாதையின் ஆரம் மற்றும் துணைக்கோளின் நிறை ஆகிய இரண்டையும்

(ஈ) சுற்றுப்பாதையின் ஆரம் மற்றும் துணைக்கோளின் நிறை ஆகிய இரண்டையும் அல்ல

5) புவிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தொலைவு இருமடங்கானால், ஓராண்டு என்பது எத்தனை நாட்கள்_____.

(அ) 64.5 **(ஆ) 1032** (இ) 182.5 (ஈ) 730

6) கெப்ளரின் இரண்டாம் விதிப்படி சூரியனையும் கோளையும் இணைக்கும் ஆர வெக்டர் சமகால அளவில் சம பரப்புகளை ஏற்படுத்துகின்றன. இவ்வித்தியானது _____ மாறா விதிப்படி அமைந்துள்ளது.

(அ) நேர்கோட்டு உந்தம் (Linear momentum) **(ஆ) கோண உந்தம் (Angular momentum)** (இ) ஆற்றல்

(ஈ) இயக்க ஆற்றல்

7) புவியினைப் பொறுத்து நிலவின் ஈர்ப்புநிலை ஆற்றல் _____.

(அ) எப்பொழுதும் நேர்க்குறி உடையது **(ஆ) எப்பொழுதும் எதிர்க்குறி உடையது**

(இ) நேர்குறியாகவோ அல்லது எதிர்க்குறியாகவோ அமையும் (ஈ) எப்போழுதும் சுழி

8) சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றி வரும் கோள் ஒன்று A,B மற்றும் C ஆகிய நிலைகளில் பெற்றுள்ள இயக்க ஆற்றல்கள் முறையே $K_A$, $K_B$ மற்றும் $K_C$ ஆகும். இங்கு நெட்டச்சு AC மற்றும் SB யானது சூரியனின் நிலை S-ல் வரையப்படும் செங்குத்து எனில், _____.




**(அ) $K_A > K_B > K_C$** (ஆ) $K_B < K_A < K_C$ (இ) $K_A < K_B < K_C$ (ஈ) $K_B > K_A > K_C$

9) புவியின் மீது சூரியனின் ஈர்ப்பியல் விசை செய்யும் வேலை _____.

(அ) எப்பொழுதும் சுழி (ஆ) எப்பொழுதும் நேர்குறி உடையது

**(இ) நேர்குறியாகவோ அல்லது எதிர்க்குறியாகவோ அமையும்** (ஈ) எப்பொழுதும் எதிர்க்குறி உடையது

10) புவியின் நிறையும் ஆரமும் இருமடங்கானால் ஈர்ப்பின் முடுக்கம் g _____.

(அ) மாறாது **(ஆ) $\frac{g}{2}$** (இ) 2g (ஈ) 4g

11) புவியினால் உணரப்படும் சூரியனின் ஈர்ப்பு புலத்தின் எண்மதிப்பு _____.

(அ) ஆண்டு முழுவதும் மாறாது

(ஆ) ஜனவரி மாதத்தில் குறைவாகவும் ஜூலை மாதத்தில் அதிகமாகவும் இருக்கும்

**(இ) ஜனவரி மாதத்தில் அதிகமாகவும் ஜூலை மாதத்தில் குறைவாகவும் இருக்கும்**

(ஈ) பகல் நேரத்தில் அதிகமாகவும் இரவு நேரத்தில் குறைவாகவும் இருக்கும்

12) சென்னையிலிருந்து திருச்சிக்கு ஒரு மனிதர், சென்றால் அவர் எடையானது_____.

(அ) அதிகரிக்கும் **(ஆ) குறையும்** (இ) மாறாது (ஈ) அதிகரித்து பின்பு குறையும்

13) சுருள்வில் தராசு ஒன்றுடன் 10 kg நிறை இணைக்கப்பட்டுள்ளது. சுருள்வில் தராசு மின்உயர்த்தி ஒன்றின் கூரையில் பொருத்தப்பட்டுள்ளது. மின் உயர்த்தி தானாக கீழே விழும்போது, தராசு காட்டும் அளவீடு_____.

(அ) 98N **(ஆ) சுழி** (இ) 49N (ஈ) 9.8N

14) ஈர்ப்பின் முடுக்கத்தின் மதிப்பு அதன் தற்போதைய மதிப்பினைப் போல நான்கு மடங்காக மாறினால், விடுபடு வேகம் _____.

(அ) மாறாது **(ஆ) 2 மடங்காகும்** (இ) பாதியாகும் (ஈ) 4 மடங்காகும்

15) புவியினைச் சுற்றும் துணைக்கோளின் இயக்க ஆற்றல் _____.

(அ) நிலை ஆற்றலுக்குச் சமம் **(ஆ) நிலை ஆற்றலைவிடக் குறைவு** (இ) நிலை ஆற்றலை விட அதிகம்

(ஈ) சுழி

16) கீழ்கண்டவைகளில் எவை மாறிலி?

**(அ) கோளின் நேர்கோட்டு உந்தம்** (ஆ) கோளின் கோண உந்தம் (இ) கோளின் மொத்த ஆற்றல்

(ஈ) கோளின் நிலை ஆற்றல்

17) ஓராண்டு காலத்தில் புவியின் மீது சூரியன் செய்த வேலையின் அளவு_____.

**(அ) சுழி** (ஆ) சுழி அல்ல (இ) நேர்குறி மதிப்புடையது (ஈ) எதிர்குறி மதிப்புடையது

18) குறிப்பிட்ட கால அளவில் சூரியன் புவி மீது செய்த வேலையின் அளவு எவ்வாறு இருக்கும்?

**(அ) நேர்குரியாக எதிர்குரியாக அல்லது சுழியாக** (ஆ) எப்போதும் நேர்குறி (இ) எப்போதும் எதிர்குறி

(ஈ) எப்போதும் சுழி

19) ஒத்த நிறை 'm' கொண்ட இரு துகள்கள் R ஆறாம் கொண்ட ஒரு வட்டப்பாதையில் பரிமாற்று புவிஈர்ப்பு செயலினால் சுற்றுகிறது. ஒவ்வொரு துகளின் வேகம்

(அ) $\frac{1}{2R}\sqrt{\frac{1}{Gm}}$ (ஆ) $\sqrt{\frac{Gm}{2R}}$ **(இ) $\frac{1}{2}\sqrt{\frac{Gm}{R}}$** (ஈ) $\sqrt{\frac{4Gm}{R}}$

20) ஒரு துணைக்கோள் ஆனது ஆறாம் R கொண்ட வட்டச் சுற்றுப் பாதையில் பூமியைச் சுற்றுசெல் மாறு ஏவப்படுகிறது. மற்றொரு துணைக்கோள் ஆரம் 4R கொண்ட வட்டப் பாதையில் ஏவப்படுகிறது எனில் அதன் சுற்றுக் காலங்களின் விகிதம்

(அ) 4:1 **(ஆ) 1:8** (இ) 8:1 (ஈ) 1:4

21) ஒரு பொருளின் நிறை 500g மேல்நோக்கி திசைவேகத்துடன் சுற்றுகிறது. 20 s க்கு பிறகு புவிப்பரப்பை திரும்ப அடைகிறது. எனில் அக்கோளில் பொருளின் மீதான எடை

(அ) 2N (ஆ) 4N (இ) 5N **(ஈ) 1N**

22) ஒரு பொருளின் m நிறை புவியின் பரப்பிலிருந்து விழும்போது அதன் உயரம் ஆரத்தின் (R) இருமடங்க்குக்குச் சமமாகும். எனில் நிலை ஆற்றலின் மாற்றம்

(அ) 2mgRmgR **(ஆ) $\frac{2}{3}$mgR** (இ) 3mgR (ஈ) $\frac{1}{3}$mgR

23) 2kg நிறையுள்ள மூன்று பொருள்கள் ஆதிப்புள்ளியிலிருந்து 1m, 2m, 4m தொலைவில் அச்சில் அமைந்துள்ளன. பிரிக்கப்பட்ட இவ்வமைப்பின் மூலப் புள்ளியைப் பொறுத்து ஈர்ப்புத் தன்னிலை ஆற்றல்

(அ) 2G (ஆ) $\frac{8}{3}$G (இ) $\frac{4}{3}$G **(ஈ) $\frac{7}{2}$G**

24) பூமியின் மையத்தில் ஒரு பொருளின் எடை

(அ) முடிவிலி **(ஆ) சுழி** (இ) பூமியின் பரப்பின் மீதான எடைக்கு சமம் (ஈ) 5 மடங்கு

25) புவியின் ஆரம் 1 சதவீதம் சுருங்குமானால் அதன் மீதான புவியீர்ப்பு முடுக்கம் (நிறையில் மாற்றம் இல்லை)

(அ) குறையும் (ஆ) கூற இயலாது (இ) ஒரே மாதிரி **(ஈ) அதிகாரிக்கும்**

26) சந்திரனின் ஒரு அணுகுண்டு வெடிக்கச் செய்யப்படுகிறது. அதன் ஒலியானது புவியை அடைய எடுத்துக் கொள்ளும் காலம்

(அ) 24 மணி நேரம் **(ஆ) புவியை அடையாது** (இ) 60 sec (ஈ) 10 நிமிடம்

27) நடக்கும் போது ஒரு நபரின் தோள்பட்டையை ஆட்டுவது

(அ) கையில் ஏற்படும் வலியினால் (ஆ) திசைவேகத்தை அதிகரிக்க (இ) திசைவேகத்தை சமன் செய்ய
**(ஈ) புவியின் ஈர்ப்பு விளைவினை ஈடுகட்ட**

28) புவிப் பரப்பின் எந்த ஆழத்தில் g ன் மதிப்பு உயரம் 5km க்கு சமம்?

**(அ) 10 km** (ஆ) 7.5 km (இ) 2.5 km (ஈ) 5 km

29) ஒரு துணைக்கோளில் வைக்கப்பட்டுள்ள ஒரு சுருள்வில்லிலிருந்து ஒரு பொருள் தொங்கவிடப்பட்டுள்ளது. அது சுற்றுப் பாதையின் ஆரம் R ல் செல்லும்போது சுருள் வில்லின் அளவீடு $w_1$ மற்றும் சுற்றுப்பாதையில் ஆரம் 2R ஆக உள்ளபோது அளவீடு $w_2$

**(அ) $w_1 > w_2$** (ஆ) $w_1 \neq w_2$ (இ) $w_1 = w_2$ (ஈ) $w_1 < w_2$

30) ஒரு சீரான மெல்லிய கம்பியின் நிறை $m_1$ நீளம் l தரை மட்டத்தில் அதன் கீழ் முனை இருக்குமாறு செங்குத்தாக தொங்கவிடப்பட்டுள்ளது. அதை கீழே விழச் செய்யும்பொது அதன் மேல் முனை எத்திசைவேகத்துடன் தாக்கும்?

(அ) $\sqrt{7gl}$ (ஆ) $\sqrt{mgl}$ **(இ) $\sqrt{3gl}$** (ஈ) $\sqrt{gl}$

31) ஈர்ப்பு விசை பின்வருவனவற்றில் எதற்கு தேவைப்படுகிறது?

(அ) வெப்பக் கதிர்வீசல் (ஆ) கடத்தல் **(இ) வெப்பச்சலனம்** (ஈ) ஏதுமில்லை

32) இரட்டை நட்சத்திர அமைப்பில் இரு விண்மீன்கள் A மற்றும் B யின் சுற்றுக்காலங்கள் $T_A$ மற்றும் $T_B$ ஆரங்கள் $R_A$ மற்றும் $R_B$ நிறைகள் $M_A$ , $M_B$ எனில்

(அ) $T_A > T_B$ எனில் $M_A > M_B$ (ஆ) $T_A > T_B$ எனில் $R_A > R_B$ **(இ) $T_A = T_B$** (ஈ) $\left(\frac{T_A}{T_B}\right)^2 = \left(\frac{R_A}{R_B}\right)^3$

33) புவியின் ஆரம் 6400 km மற்றும் செவ்வாயின் ஆரம் 3200 km. புவியின் நிறையானது செவ்வாயின் நிறையைப் போல் 10 மடங்கு. ஒரு பொருளின் எடை 200 N பூமியின் பரப்பில் உள்ளபோது, செவ்வாயின் பரப்பின் மீது.

(அ) 40 N (ஆ) 2 N (இ) 88 N **(ஈ) 80 N**

34) ஒரு ஏவுகணை விடுபடுவேகத்தை விட்டா குறைவான திசைவேகத்துடன் ஏவப்படுகிறது. அதன் நிலை ஆற்றல், இயக்க ஆற்றலின் கூட்டுத் தொகை.

(அ) ஒன்று **(ஆ) எதிர்குறி** (இ) சுழி (ஈ) நேரக்குறி

35) புவிபரப்பின் மீது புவி ஈர்ப்பு முடுக்கம் 'g', m நிறையுள்ள ஒரு பொருளை புவிப்பரப்பிலிருந்து R உயரத்திற்கு உயர்த்த செய்யப்பட்ட வேலை [உயரம் R புவியின் ஆரத்துக்கு சமம்]

**(அ) $\frac{1}{2}$mgR** (ஆ) 2mgR (இ) mgR (ஈ) $\frac{1}{4}$mgR

36) ஒரு துணைக்கோள் புவியின் பரப்பிற்கு அருகில் சுற்றுப் பாதையில் உள்ளது. துணைக் கோளிலிருந்து எறியப்படவேண்டிய ஒரு துகள் புவியிலிருந்து விடுபடுகிறது. புவியிலிருந்து விடுபடு வேகம் Ve எனில், துணைக் கோளைப் பொருத்து அதன் வேகம்

(அ) $V_e$ விட குறைவு (ஆ) $V_e$ விட அதிகம் (இ) $V_e$ விட சமம் **(ஈ) எறியப்படும் திசையைப் பொருத்தது**

37) கோண இயக்கத்தில் பின்வருவனவற்றுள் மாறாதது சூரியனிலிருந்து பார்ப்பது போல்-நீள்வட்டப் சுற்றுப்பாதை எனக் கொள்.

(அ) வேகம் **(ஆ) கோண உந்தம்** (இ) இயக்க ஆற்றல் (ஈ) கோண வேகம்

38) புவிஈப்பு விசை ஒரு ____ விசை

**(அ) சிறிய** (ஆ) பெரிய (இ) மைய (ஈ) அரிதாக

39) ______ அதிகரிக்கும் போது புவிஈர்ப்பு விசையினால் ஏற்படும் முடுக்கம் குறையும்.

**(அ) உயரம்** (ஆ) கிடைமட்டம் (இ) ஆழம் (ஈ) கடல் மட்டம்

40) ஈர்ப்பு நிலை ஆற்றல் ஒரு _____ அளவு

**(அ) ஸ்கேலார்** (ஆ) வெக்டர் (இ) உண்மை (ஈ) பரிமாணமற்றது

41) நிறை 'm' லிருந்து r தொலைவில் உள்ள புள்ளியில் ஈர்ப்புப்புலச் செறிவு $\vec{E}$ என்பது ஓரலகு நிறையினால் உணரப்படும் ஈர்ப்புக விசை எனில் $\vec{E}$ =

**(அ)** $\frac{Gm}{r}$ (ஆ) $\frac{Gm}{r}$ (இ) $-\frac{Gm}{r^2}\hat{r}$ (ஈ) $-\frac{Gm}{r}$

42) விடுபடுவேகம் ஒரு பொருளின் நிறையை ________

(அ) சார்ந்தது **(ஆ) சார்ந்ததல்ல** (இ) மாறும் (ஈ) நேர்கோடு

43) _____ சூரியமையக் கொள்கையினை முன் மொழிந்தார்

**(அ) கோப்பர் நிக்கஸ்** (ஆ) டாலமி (இ) கெப்ளர் (ஈ) கலிலியோ

44) புவியின் சுழற்சியின் காரணமாக புவிஈர்ப்பு முடுக்கம் ______ ல் பெருமமாக இருக்கும்.

(அ) புவிமையத்தில் **(ஆ) துருவங்களில்** (இ) கடல் மட்டத்திற்கு மேலே (ஈ) கடல் மட்டத்திற்கு கீழே

45) முறுக்குத் தராசைக் கொண்டு புவியின் மாறிலியின் G ன் மதிப்பு சோதனை மூலம் கண்டறிந்தவர்

**(அ) ஹென்றி கேவண்டிஷ்** (ஆ) நியூட்டன் (இ) கெப்ளர் (ஈ) கலிலியோ

46) (I) புவிஈர்ப்பு விசை கவரக்கூடியது
(II) புவி ஈர்ப்பு நிலை ஆற்றல் ஸ்கேலார் அளவு
எந்தக் கூற்று சரி?

(அ) I மட்டும் (ஆ) II மட்டும் **(இ) இரண்டும் சரி** (ஈ) ஏதுமில்லை

47) (I) கோப்பல்நிக்கஸ் மற்றும் கெப்ளர் ஒரு கொள் மற்றும் சூரியனுக் கிடையேயான தொலைவினை வடிவியல் மற்றும் திரிகோணவிதி கொண்டு கணக்கிட்டனர்
(II) எரடோஸ்தனிஸ் வியாழனின் ஆரத்தைக் கணக்கிட்டார்.
எந்தக் கூற்று சரி?

**(அ) I மட்டும்** (ஆ) II மட்டும் (இ) இரண்டும் சரி (ஈ) ஏதுமில்லை

48) (I) புவிஈர்ப்பு விசை ஒரு மைய விசை
(II) துணைக்கோள்களின் ஆற்றல் சிலநேரங்களில் எதிர்மறை ஆகும்.
எந்தக் கூற்று சரியல்ல?

(அ) I மட்டும் **(ஆ) II மட்டும்** (இ) இரண்டும் சரி (ஈ) ஏதுமில்லை

49) (I) கெப்ளரின் விதி நியூட்டனின் ஈர்ப்பு விதியிலிருந்து தருவிக்கப்பட்டதல்ல
(II) கோள்களின் இயக்கம் கோல்பர் நிகாஸால் விளக்கப்பட்டது
எந்தக் கூற்று சரி?

(அ) I மட்டும் (ஆ) II மட்டும் (இ) இரண்டும் சரி **(ஈ) ஏதுமில்லை**

50) (I) கோப்பர்நிகஸ் மாதிரி பின்னோக்கி இயக்கத்தை விளக்குகிறது
(II) கொப்பர் நிக்கஸ்க்கு முன்னரே டாலமி பின்னோக்கு இயக்கத்தடிததை விளக்கியுள்ளார்.
எந்தக் கூற்று சரியல்ல?

(அ) I மட்டும் **(ஆ) II மட்டும்** (இ) இரண்டும் சரி (ஈ) ஏதுமில்லை